மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள், தொகுதிப் பிரச்சினையை எழுதிக் கொடுத்து விடுங்கள்; ரெக்கார்டு செய்து கொள்ளலாம். இப்போது நேரமில்லை.

திரு. ஆர். ராமமூர்த்தி: என்னுடைய தொகுதிக்குட்பட்ட காணை ஒன்றியத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்பாடு செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

8. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 22-4-2013 திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 22-காவல் மற்றும் மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகியன 23-4-2013 செவ்வாய்க்கிழமை மற்றும் 25-4-2013 வியாழக்கிழமை ஆகிய நாட்களில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும். 23-4-2013 செவ்வாய்க்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம், மானியக் கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் மற்றும் மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை ஆகியவை 26-4-2013 வெள்ளிக்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும். 25-4-2013 வியாழக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகியன 29-4-2013 திங்கட்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும். 26-4-2013 வெள்ளிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணிநூல் மற்றும் மானியக் கோரிக்கை எண் 18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் 6-5-2013 திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய மானியக்

2013 ஏப்ரல் 5] [பேரவைத் தலைவர்]

கோரிக்கைகள் 22-4-2013 திங்கட்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும். 29-4-2013 திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் மற்றும் மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு ஆகிய மானியக் கோரிக்கைகள் 6-5-2013 திங்கட்கிழமை அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவையின் ஒப்புதலோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

7. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

***திரு. மு. ரெத்தினசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நாடுஎன்ப நாடா வளத்தன; நாடுஅல்ல
நாட வளந்தரு நாடு.”

வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் எளிதாகக் கிடைக்கக்கூடிய நாடு நல்ல நாடு, வருந்தி முயன்ற பின்னர்தான் வசதிகள் கிடைக்குமென்றால் அது நல்ல நாடாகாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

‘மாடு கட்டிப் போரடித்தால் போதாது என்று யானை கட்டிப் போரடித்த பூமி’, ‘சோழ வளநாடு சோறுடைத்து’ என்றும், நன்செய்யும், புன்செய்யும் கொஞ்சி விளையாடும் தஞ்சையில் விவசாயிகளினுடைய எதிர்காலம் என்னவாகுமோ என்று ஏங்கித் தவித்த தஞ்சை டெல்டா விவசாயிகளின் உயிர் நாடியான காவேரிப் பிரச்சினைக்கு, சட்டத்தின் வாயிலாக நிரந்தரத் தீர்வு கண்ட மாண்புமிகு தமிழக முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி)